# மதுரை மாநகராட்சி

# மாண்புமிகு மேயர் தலைமையில் நடைபெற்ற

# மாமன்ற கூட்ட தீர்மானங்கள்

# 26.06.2023-ந் தேதி நேரம்: காலை: 10.30 மணி

**1.ந.க.எண்.ஓ4/010536/2021**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் நிர்வாக நலன் கருதியும், பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதியும் 2023-2024 கல்வியாண்டிற்கு முற்றிலும் தற்காலிக அடிப்படையில் ஏற்கனவே பணிபுரிந்து வரும் 75 KG ஆசிரியர்கள் மற்றும் **63** உதவியாளர்களை 2023-2024 கல்வியாண்டின் **பள்ளி முதல் வேலை நாள்** முதல் **89** நாட்கள் வரை பணியமர்த்திக் கொள்ளவும், 75 KG ஆசிரியர்களுக்கு ஏற்கனவே வழங்கி வந்த மாதாந்திர மதிப்பூதியம் ரூ.7000/- லிருந்து ரூ.8000/- என உயர்த்தி வழங்கவும், 63 உதவியாளர்களுக்கு ஏற்கனவே வழங்கி வந்த மாதாந்திர மதிப்பூதியம் ரூ.3000/- லிருந்து ரூ.3500/- என உயர்த்தி வழங்கவும், இதனால் ஏற்படும் செலவினத் தொகையினை மாநகராட்சி கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>நிபந்தனைகள் :</u>

1. இந்த பணியானது முற்றிலும் தற்காலிகமானது.
2. இந்த தற்காலிக பணியின் மூலம் வருங்காலங்களில் பணிநிரந்தரமோ, பணிமுன்னுரிமையோ வழங்கப்பட மாட்டாது.
3. முந்தைய பணிக்காலம் ஏதுமிருப்பின் பின் தொடர்ச்சி ஏதுமின்றி முந்தைய பணிக்காலம் இதன் மூலம் முற்றிலும் துண்டிக்கப்படுகிறது.
4. இது முற்றிலும் புதிய தற்காலிக பணியமர்வாகும்.
5. இந்த தற்காலிக பணியின்படி நடப்பு கல்வியாண்டின் பள்ளி இறுதி நாள் வரை பணிபுரிய அனுமதிக்கப்படுவர். நடப்பு கல்வியாண்டின் பள்ளி இறுதி நாள் வரை முடிவுற்ற பின்னர் பின் தொடர்ச்சி ஏதுமின்றி பணிக்காலம் தானாகவே காலாவதியாகிவிடும்.
6. இந்த ஆணையின்படி பணியமர்த்தப்படுபவர்கள் எவ்வித முன்னறிவிப்பின்றியும் எந்த நேரத்திலும் மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்படுவர்.
7. முந்தைய பணிக்காலம் மற்றும் தற்போதைய பணிக்காலம் யாவும் பின்வரும் காலங்களில் தொடர் பணியாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.
8. இதனிடையில் அரசு மூலம் ஆசிரியர்கள் நியமனம் ஏதும் செய்யப்படும் பட்சத்தில் தற்காலிக KG ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர்கள் மாநகராட்சி பணியிலிருந்து எவ்வித முன்னறிவிப்பின்றி உடனடியாக விடுவிக்கப்படுவர்.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்: 238</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**2.ந.க.எண். ஓ4/015135/2021**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் **15** மேல்நிலைப்பள்ளிகளில் நிர்வாக நலன் கருதியும், பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதியும் **2023–2024**

கல்வியாண்டிற்கு முற்றிலும் தற்காலிக அடிப்படையில் ஏற்கனவே பணிபுரிந்து வந்த **38** முதுகலை பட்டதாரி ஆசிரியர்களை 2023-2024 **ஆம் கல்வியாண்டின் பள்ளி முதல் வேலை நாள் முதல் 89** நாட்கள் வரை கீழ்க்காணும் நிபந்தனைகளின்படி பணியமர்த்திக் கொள்ளவும், அன்னார்களுக்கு ஏற்கனவே வழங்கி வந்த மாதாந்திர மதிப்பூதியத் தொகை ரூ.12000/- லிருந்து ரூ.13000/- என உயர்த்தி வழங்கவும், இதனால் ஏற்படும் செலவினத் தொகையினை மாநகராட்சி கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

நிபந்தனைகள் :

1. இந்த பணியானது முற்றிலும் தற்காலிகமானது.
2. இந்த தற்காலிக பணியின் மூலம் வருங்காலங்களில் பணிநிரந்தரமோ, பணிமுன்னுரிமையோ வழங்கப்பட மாட்டாது.
3. முந்தைய பணிக்காலம் ஏதுமிருப்பின் பின் தொடர்ச்சி ஏதுமின்றி முந்தைய பணிக்காலம் இதன் மூலம் முற்றிலும் துண்டிக்கப்படுகிறது.
4. இது முற்றிலும் புதிய தற்காலிக பணியமர்வாகும்.
5. இந்த தற்காலிக பணியின்படி நடப்பு கல்வியாண்டின் பள்ளி இறுதி நாள் வரை பணிபுரிய அனுமதிக்கப்படுவர். நடப்பு கல்வியாண்டின் பள்ளி இறுதி நாள் வரை முடிவுற்ற பின்னர் பின் தொடர்ச்சி ஏதுமின்றி பணிக்காலம் தானாகவே காலாவதியாகிவிடும்.
6. இந்த ஆணையின்படி பணியமர்த்தப்படுபவர்கள் எவ்வித முன்னறிவிப்பின்றியும் எந்த நேரத்திலும் மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்படுவர்.
7. முந்தைய பணிக்காலம் மற்றும் தற்போதைய பணிக்காலம் யாவும் பின்வரும் காலங்களில் தொடர் பணியாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.
8. இதனிடையில் அரசு மூலம் ஆசிரியர்கள் நியமனம் ஏதும் செய்யப்படும் பட்சத்தில் இந்த தற்காலிக முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் மாநகராட்சி பணியிலிருந்து எவ்வித முன்னறிவிப்பின்றி உடனடியாக விடுவிக்கப்படுவர்.

**மாமன்றத்தீர்மானம் எண்: 239**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**3.ந.க.எண். ஒ4/017586/2021**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் **96** பள்ளிகளில் சுகாதார நலன் பேணும் பொருட்டும் நிர்வாக நலன் கருதியும், பள்ளி மாணாக்கர்களின் சுகாதார நலன் கருதியும் **2023–2024** கல்வியாண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண்.21787/2021/EA2 நாள் **: 28.10.2021**ல் நிர்ணயம் செய்துள்ளவாறு ஏற்கனவே பணிபுரிந்து வந்த **120** தூய்மை பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.391/- மட்டும் ஊதியம் என்ற அடிப்படையில், 2023-2024 **ஆம் கல்வியாண்டின் பள்ளி முதல் வேலை நாள் முதல் 89** நாட்கள் வரை பள்ளி வேலை நாட்களுக்கு மட்டும் கீழ்க்காணும் நிபந்தனைகளின்படி பணியமர்த்திக் கொள்ளவும், இதனால் ஏற்படும் செலவினத் தொகையினை மாநகராட்சி கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

நிபந்தனைகள் :

1. இந்த பணியானது முற்றிலும் தற்காலிகமானது.
2. இந்த தற்காலிக பணியின் மூலம் வருங்காலங்களில் பணிநிரந்தரமோ, பணிமுன்னுரிமையோ வழங்கப்பட மாட்டாது.

3. முந்தைய பணிக்காலம் ஏதுமிருப்பின் பின் தொடர்ச்சி ஏதுமின்றி முந்தைய பணிக்காலம் இதன் மூலம் முற்றிலும் துண்டிக்கப்படுகிறது.
4. இது முற்றிலும் புதிய தற்காலிக பணியமர்வாகும்.
5. இந்த தற்காலிக பணியின்படி நடப்பு கல்வியாண்டின் பள்ளி இறுதி நாள் வரை பணிபுரிய அனுமதிக்கப்படுவர். நடப்பு கல்வியாண்டின் பள்ளி இறுதி நாள் வரை முடிவுற்ற பின்னர் பின் தொடர்ச்சி ஏதுமின்றி பணிக்காலம் தானாகவே காலாவதியாகிவிடும்.
6. இந்த ஆணையின்படி பணியமர்த்தப்படுபவர்கள் எவ்வித முன்னறிவிப்பின்றியும் எந்த நேரத்திலும் மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்படுவர்.
7. முந்தைய பணிக்காலம் மற்றும் தற்போதைய பணிக்காலம் யாவும் பின்வரும் காலங்களில் தொடர் பணியாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.
8. பள்ளி வேலை நாட்களுக்கு மட்டும் ஊதியம் வழங்கப்படும்.
9. ஒரே நபரை தொடர்ந்து பணியமர்த்துக் கொள்ள வேண்டியதில்லை.
10. பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாதந்தோறும் கல்வி அலுவலரிடம் சமர்ப்பிக்கும் வருகைப் பதிவேட்டினை அடிப்படையாக கொண்டு அந்த மாதத்திற்கான ஊதியம் வழங்கப்படும்.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்: 240</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>4. ந.க.எண்.018486/ஓ4/2021</u>**

தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்பட்டு அரசு, நகராட்சி, அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ்வழி மற்றும் ஆங்கிலவழி கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கான சிறப்பு கட்டணம் 2008–2009ஆம் ஆண்டு முதல் மாணாக்கர்களிடமிருந்து நேரடியாக வசூலிக்கப்பட்டு வந்ததை இரத்து செய்து இதனால் பள்ளிகளுக்கு ஏற்பட்டு வரும் நிதியிழப்பினை ஈடு செய்யும் வகையில் பள்ளிகளுக்கான இழப்பீட்டுத் தொகை அரசால் அனுமதிக்கப்பட்டு வருகின்றது.

அதனைத் தொடர்ந்து, மாநகராட்சி பள்ளிகளுக்கு சிறப்புக் கட்டணம் வழங்குவது தொடர்பாக, பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.50104/ஜி2/இ3/2013 நாள் : 08.11.2013ல் 2008–2009ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் சிறப்புக் கட்டணம் (Special Fees) இரத்து செய்யப்பட்டு பள்ளிகளுக்கு ஏற்படும் நிதி இடிப்பினை அரசே ஈடு செய்து வருவதாகவும், மாநகராட்சியை பொறுத்த வரையில் மாநகராட்சி உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சிறப்புக் கட்டணம் இழப்பீட்டுத் தொகையினை கல்விநிதியிலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து, மதுரை மாநகராட்சி உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளுக்கு 2022–2023 ஆம் கல்வி ஆண்டிற்கு சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதங்களின் அடிப்படையில் மொத்தம் ரூ.6,54,022/- (ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து இருபத்து இரண்டு மட்டும்) சிறப்புக் கட்டணமாக வழங்க கோரப்பட்டுள்ளது.

அதன் பேரில், மேற்காணும் மதுரை மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மதுரை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை தமிழ் மற்றும்

ஆங்கிலவழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சிறப்பு கட்டணம் (Special Fees) இழப்பீட்டு தொகை ரூ.6,54,022/- (ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து இருபத்து இரண்டு மட்டும்) சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு Education cess Fund–லிருந்து வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்: 241**</u>

<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**</u>

<u>**5. ந.க.எண்.ஒ3/018281/2016**</u>

மதுரை மாநகராட்சி வில்லாபுரம் நடுநிலைப்பள்ளி தனியார் கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகின்றது. அதற்கான மாத வாடகை மாமன்ற தீர்மானம் எண்.37 நாள் : 06.02.2017ன்படி 01.01.2017 முதல் ரூ.37,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு மாநகராட்சி கல்விநிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது மேற்காணும் பள்ளி கட்டிட உரிமையாளர்கள் மாத வாடகை உயர்த்தி தர கோரிய கோரிக்கை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, மாதாந்திர வாடகை கட்டணத் தொகையினை 01.06.2023 முதல் ரூ.37,000/- லிருந்து இதற்கு முன்னர் வழங்கிய தொகையான ரூ.41,000/- (ரூபாய் நாற்பத்து ஓராயிரம் மட்டும்) என உயர்த்தி வழங்கவும், அதை கட்டிட உரிமையாளர்கள் திருமதி.V.ராஜேஸ்வரி மற்றும் திரு.V.சுரேஷ் ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கவும், இதனால் ஏற்படும் செலவினத் தொகையினை மாநகராட்சி கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்: 242**</u>

<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**</u>

<u>**6. ந.க.எண்.ஒ8/012020/2022**</u>

அரசாணை எண்.43 சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை நாள் : 27.07.2022ன்படி மதுரை மாநகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக செயல்பட்டு வரும் 26 தொடக்கப்பள்ளிகளில் உணவுப் பரிமாறும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 42 இல்லம் தேடி கல்வி திட்ட (ITK) தன்னார்வ பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.ROC No.17404/2022/M1 நாள் : 02.11.2022 மற்றும் மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.179 நாள் : 03.04.2023ன்படி கடந்த 15.09.2022 முதல் மாதந்தோறும் ஒரு நபருக்கு ரூ.1500/- வீதம் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, அரசாணை எண்.01 சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை நாள் : 13.01.2023ன்படி மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் 14 நடுநிலைப்பள்ளிகள் மற்றும் விரிவாக்க பகுதியில் உள்ள 20 தொடக்கப்பள்ளிகள் மற்றும் 13 நடுநிலைப்பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இரண்டாம் கட்டமாக கடந்த 01.03.2023 முதல் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக விரிவுப்படுத்தப்பட்ட மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை எவ்வித தொய்வின்றியும், செம்மையாகவும் செயல்படுத்திட ஏதுவாக மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகள் 14 மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியில் உள்ள 20 தொடக்கப்பள்ளிகள் மற்றும் 13 நடுநிலைப்பள்ளிகளில் 5517 பயனாளிகளுக்கு உணவு பரிமாறும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 84 தன்னார்வ பணியாளர்களுக்கு அவசர அவசியத்தை கருதி

கடந்த **01.03.2023** முதல் **28.04.2023** வரை நபர் ஒருவருக்கு ரூ.1500/- வீதம் மதிப்பூதியத்தினை மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாநகராட்சி கல்விநிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்றத்தின் பின்னேற்பையும்,

மேற்காணும் **84** தன்னார்வ பணியாளர்களுக்கு இனி வருங்காலங்களில் ஜீன் **2023** முதல் நபர் ஒருவருக்கு ரூ.1500/- வீதம் தொடர்ந்து மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கிடவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 243**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**7. F1/27462/2012**

மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தமிழ்நாடு நிதித்துறை அரசாணை (நிலை) எண்.142 நாள்:17.05.2023-ன் பிரகாரம் அரசு ஊழியர்களைப் போல 01.04.2023 முதல் அகவிலைப்படி 38% சதவீதத்திலிருந்து 42% சதவீதமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அகவிலைப்படி வழங்கிய அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : இதற்கான உத்தேச ஒரு மாத செலவு ரூ.35.00 இலட்சம்

**மாமன்றத்தீர்மானம் எண்: 244**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8. F8/000482/2023**

மதுரை மாநகராட்சியில் தற்போது ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கு 01.04.2023 முதல் 38% அகவிலைப்படியானது 42% ஆக உயர்த்தி வழங்குவதற்கு வெளியிடப்பட்ட அரசாணை எண். 145 நிதித் (ஓய்வூதியம்) துறை நாள்:17.05.2023–ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 245**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**9. H1/002778/2023**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள 100 வார்டுகளில் அனைத்து பகுதிகளுக்கும் சுகாதார பணிக்கு தேவையான கிருமி நாசினி பொருட்களான பிளிச்சிங் பவுடர் கொள்முதல் செய்வதற்க்கு விலைப்புள்ளி பெற்று, இதில் மிகக்குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/S SVR Traders நிறுவனத்திற்க்கு 13.3.2023 ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி பிளிச்சிங் பவுடர் 20டன் கொள்முதல் செய்ததற்கு செலவினமாக ரூ.8,00,000/- வழங்குவதற்கு மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 246**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**10. H1/004847/2023**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் "**சித்திரை திருவிழா 2023**" ம் ஆண்டிற்கு அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத் திருவிழா மற்றும் அருள்மிகு கள்ளழகர் வைகையாற்றில் எழுந்தருளல் மற்றும் இதர திருவிழாக்கள் 23.04.2023 முதல் 08.05.2023 வரை நடைபெற்றது.

மேற்படி திருவிழாவிற்கு பொது சுகாதார பணிகள் மற்றும் செலவினத் தொகை கீழ்கண்ட கோப்புகளில் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

| வ எண் | கோப்பு எண் | பொருள் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | H1/005073/2023 | சித்திரை திருவிழா 2023க்கு சுகாதார பணிக்கு தேவையான 16 நாட்கள் நபர் 1–க்கு ரூ.558/– வீதம் 1063 (Mandays) அடிப்படையில் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் சப்ளை செய்வது தொடர்பாக. | M/S. Exsernet | Rs.4,27,707/- |
| 2 | H1/005074/2023 | சித்தரை திருவிழா 2023க்கு சுகாதார பணிக்கு தேவையான தளவாடச் சாமான் கொள்முதல் தொடர்பாக. | M/S. SVR Traders | Rs.4,99,950/- |
| 3 | H1/005075/2023 | சித்திரை திருவிழா 2023க்கு சுகாதார பணிக்கு தேவையான கிருமி நாசினி பொருட்கள் கொள்முதல் செய்வது தொடர்பாக. | M/S. SVR Traders | Rs.7,39,000/- |
| 4 | H1/005158/2023 | சித்திரை திருவிழா 2023 சுகாதார பணிக்கு தேவையான Tractor, BOB Cot சப்ளை செய்வது தொடர்பாக. | M/S. Sri Sai Recycle solutions | Rs.3,64,960/- |
| 5 | H1/005414/2023 | சித்திரை திருவிழா 2023 கொசுக்களை கட்டுப்படுத்த சுகாதார பணிக்கு தேவையான Pyrethrum 2% Extract கொள்முதல் செய்வது தொடர்பாக. | **TNMSC APPROVAL COMPANY** M/S NITAPOL INDUSTRIES | Rs.2,02,130/- |
| 6 | H1/005076/2023 | சித்திரை திருவிழா 2023 கொசுக்களை கட்டுப்படுத்த சுகாதார பணிக்கு தேவையான Technical Malathion (Grade 95%) கொள்முதல் செய்வது தொடர்பாக. | M/S SUDARSAN BIOCHEM | Rs.3,88,960/- |

மேற்படி பொது சுகாதார அவசர அவசியம் கருதி “சித்திரை திருவிழா 2023” சுகாதார பணி செலவின தொகை வழங்குவதற்கு மாமன்றத்தின் பதிவிற்கும் வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்ப.

**மாமன்றத்தீர்மானம் எண்: 247**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**11. H1/011637/2022**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள 100 வார்டுகளுக்கு அனைத்து பகுதிகளுக்கும் முதிர்ந்த கொசுக்களை ஒழித்தல் பணி மேற்கொள்வதற்கு Malathion Technical Grade 95% கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி பெற்று, இதில் மிகக் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. KINGSUN ENIVRO PRIVATE LIMITED., நிறுவனத்திற்கு 13.03.2023–ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி Malathion Technical Grade 95% இரண்டாம் கட்டாமாக கொள்முதல் செய்வதற்கு செலவினமாக ரூ.8,58,450/- வழங்கியமைக்கு மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 248**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12. H1/011638/2022**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள 100 வார்டுகளுக்கு அனைத்து பகுதிகளுக்கும் முதிர்ந்த கொசுபுழுக்களை அழிப்பதுடன் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த பணி மேற்கொள்வதற்கு Pyrethurum 2% Extract கொள்முதல் செய்வதற்கு மிகக் குறைந்த

விலைப்புள்ளி வழங்கி **Tamilnadu Medical Services Corporation LTD** ஆங்கிகாரம் பெற்ற **M/s. NITAPOL INDUSTRIES**., நிறுவனத்திற்கு **22.02.2023–ல்** சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி Pyrethurum 2% Extract இரண்டாம் கட்டாமாக கொள்முதல் செய்வதற்கு செலவினமாக ரூ.8,02,872/- வழங்குவதற்கு மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்: 249</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>13. H1/011639/2022</u>**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள **100** வார்டுகளுக்கு அனைத்து பகுதிகளுக்கும் கொசுபுழுக்களை அழிப்பதுடன் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த பணி மேற்கொள்வதற்கு Bacillus Thuringiensis Var Israelensis 5% WP Strain -164 கொள்முதல் செய்வதற்கு மிகக் குறைந்த விலைப்புள்ளி வழங்கி **Tamilnadu Medical Services Corporation LTD** ஆங்கிகாரம் பெற்ற **M/s.BIOTECH INTERNATIONAL LIMITED**., நிறுவனத்திற்கு **22.02.2023–ல்** சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி Bacillus Thuringiensis Var Israelensis 5% WP Strain -164 இரண்டாம் கட்டாமாக கொள்முதல் செய்வதற்கு செலவினமாக ரூ.3,10,750/- வழங்குவதற்கு மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்: 250</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>14.H1/027690/2016</u>**

மதுரை மாநகராட்சி 147.99 சதுரகிலோ மீட்டர் அளவை கொண்டது. ஐந்து மண்டலங்களில் உள்ள 100 வார்டுகளில் அனைத்து பகுதிகளிலும் 2830 தெருக்கள் உள்ளன. 142 சமுதாய கழிப்பறைகளும், 140 பொது கழிப்பறைகளும் உள்ளன. மேலும் இரண்டு பேருந்து நிலையங்கள் உள்ளன. தோராயமாக மதுரை மாநகராட்சி பகுதிகளுக்கு நாளொன்றுக்கு சுமார் 4 லட்சம் பொது மக்கள் வந்து செல்கின்றனர். ஆற்றங்கரை பகுதிகளிலும் சுகாதார பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. சுகாதார பணிக்கு தேவையான கிருமி நாசினி பொருட்களான நீர்த்த சுண்ணாம்புத்தூள் அவசியம் தேவைப்படுகிறது. நோய் தொற்று பரவுவமை தடுக்க நீர்த்த சுண்ணாம்புத்தூள் அத்தியாவசியமாக உள்ளது. எனவே நீர்த்த சுண்ணாம்புத்தூள் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி பெற்று, இதில் மிகக்குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s.SVR Traders நிறுவனத்திற்க்கு 13.3.2023ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி நீர்த்த சுண்ணாம்புத்துாள் 80 டன் கொள்முதல் செய்ததற்கு செலவினமாக ரூ.7,19,880/- சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்: 251</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>15. MH1/01247-A/2019</u>**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் அனைத்து மண்டல வார்டு பகுதிகளில் வெளிக்கொணர்வு முறையில் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் ஒப்பந்த அடிப்படையில் 530 கொசு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) மதுரை, மகளிர் சுய உதவி குழு (CLC) மூலமாக 28.02.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். மேற்படி பணியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் ஊதியத்தொகையில்

ESI மற்றும்  EPF பிடித்தம் செய்வதற்கு பட்டியலில் வழி வகை செய்யப்படவில்லை. மேலும் சப்ளை உத்தரவில் நிபந்தனைகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. இந்நிலையில் மேற்படி பிடித்தங்களை பிடித்தம் செய்து மதுரை, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கில் செலுத்துமாறு 11.05.2023-ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தின்படி இனிவரும் மாதங்களில் EPF 13% மற்றும்  ESI 3.25% பிடித்தம் செய்து செலுத்துவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்: 252**</u>

<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**</u>

<u>**16. மதி4/011582/2022**</u>

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை தெற்கு வட்டம் – மண்டலம் **5** – வார்டு எண்: **92**, அவனியாபுரம் கிராமம் – சர்வே எண்கள்: 495/2A1, 2A2, 2A3, 2A4, 2A5, 2A6–ல் **1.45**ஏக்கர் (**5876.00** சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க. உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர். மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம். மதுரை அவர்களின் ந.க.எண்: 2224/2022/மதி**2** நாள்: 27.09.2022-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மதுரை தெற்கு வட்டம் – மண்டலம் **5** – வார்டு எண்: **92**, அவனியாபுரம் கிராமம் – சர்வே எண்கள்: 495/2A1, 2A2, 2A3, 2A4, 2A5, 2A6–ல் **1.45** ஏக்கர் (**5876.00** சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் மனைப்பிரிவில் அமையும் <u>**சாலைக்கான இடம்  Iவது (1–1) சாலையானது 14.50 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும (30 அடி சாலையாகவும்**), **சாலைக்கான இடம்  IIவது (2–2) சாலையானது 80.20 மீட்டர் நீளமும், 10.00 மீட்டர் அகலமும (33 அடி சாலையாகவும்**), **சாலைக்கான இடம்  IIIவது (3–3) சாலையானது 56.15 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும (30 அடி சாலையாகவும்**), **சாலைக்கான இடம்  IVவது (4–4) சாலையானது 57.45 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்**), **சாலைக்கான இடம்  Vவது (5–5) சாலையானது 40.75 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்**), மூலை முடக்கு உட்பட மொத்தம் **1843.10 சதுர மீட்டர் இடத்தினையும் பத்திரம் எண்: 12697/2022, நாள்: 08.09.2022-ம் தேதியில் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் - 40.28 சதுர மீட்டர் பத்திரம் எண்: 12697/2022, நாள்: 08.09.2022-ம்**</u> மதுரை மாவட்டம், மதுரை தெற்கு தாலுகா, அவனியாபுரம் கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவு செய்து காலிமனை வரிவிதித்தற்கும் நகரமைப்பு குழு ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்: 253**</u>

<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**</u>

<u>**17. ம2உ3/006766/2022**</u>

மதுரை மாவட்டத்தில் உள்ள இளைஞர்களின் எதிரிகால வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் பொருட்டு தானியங்கி வாகன துறைகள், தொழில்துறை, உணவு மற்றும் ஜவுளி உள்ளிட்ட துறையிலும் மதுரை மாவட்டம் முன்னேற்ற நகரமாக இருப்பதாலும், பொறியியல்

கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் நிறைந்த கல்வி நகரமாகவும் மனிதவளம் நிறைந்த இடமாகவும் திகழ்வதற்கு மதுரை மாநகரில் ELCOT—ன்கீழ் உலக புகழ்பெற்ற பல்வேறு IT நிறுவனங்கள் குறிப்பாக ஹனிவெல், HCL, பின்னாக்கில் இன்போடெக், சொல்லூசன்ஸ் நல்லமுறையில் இயங்கி வருவதற்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

மேற்கண்ட ELCOT—ஐ தொடர்ந்து மதுரை மாநகரில் செப்டம்பர் 2022—ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.09.2022 அன்று மதுரையில் நடைபெற்ற "தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" மாநாட்டில் கலந்து கொண்டு, "டைடல் மற்றும் மதுரை மாநகராட்சி இணைந்து ஒரு முன்னோடி டைடல் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்து, மதுரை மாநகரின் மையப்பகுதியான மாட்டுத்தாவணியில் இரண்டு கட்டங்களாக டைடல் பார்க் அமைக்க உத்தேசித்து முதற்கட்டமாக ரூ.600 கோடி திட்ட மதிப்பீட்டில் ஐந்து ஏக்கரில் டைடல் பார்க் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் கட்டத்தில், இத்திட்டத்தின்படி மேலும் ஐந்து ஏக்கரில் டைடல் பார்க் பணிகள் இரட்டிப்பாக்கப்படும்" என அறிவித்துள்ளார்கள். TIDEL PARK ரூ.600 கோடி செலவில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை நடைமுறைபடுத்துவதற்கு மாட்டுத்தாவணி பேருந்துநிலையம் அருகே உள்ள சர்வே வார்டு – XVI, பிளாக் எண்: 65, நகர நிலஅளவை எண்: 4/1(P), 4/2(P), 5/1, 5/2 & 9/1(P), தல்லாகுளம் கிராமம், மதுரை வடக்கு தாலுகா என்ற முகவரியில் உள்ள மனையிடம் மதுரை டைடல் பார்க் திட்டத்திற்கு ஏற்ற இடமாக 12.12.2022 அன்று ACS Industries, IPSC துறை, MDTICO மற்றும் MD TIDEL, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் ஆகியோர் ஆய்வு செய்து T.S.No: 5/1 & 5/2-ல் சுமார் 5.60 ஏக்கர் நிலத்தை Phase 1 திட்டத்தில் செயல்படுத்துவதற்கு தீர்மானம் முன்மொழிந்துள்ளனர்.

மதுரை மாநகராட்சி மற்றும் டைடல் பார்க் இணைந்து இச்சிறப்பு திட்ட நோக்கத்தினை நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இச்சிறப்பு திட்ட நோக்கத்தின் மூலதன வடிவமைப்பு குறித்து மதுரை மாநகராட்சி மற்றும் டைடல் பங்கேற்பாளர்கள் சம்மந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து விரைவில் முடிவு செய்யப்படும்.

மேலும் Design Engineering மற்றும் Project Management—க்கான ஆலோசகரை ஈடுபடுத்திடும் நடவடிக்கையில் டைடல் பார்க் உள்ளது.

மதிப்பீடு மற்றும் வடிவமைப்பு ஆகியன இறுதி செய்யப்பட்டவுடன் ஒப்பந்தபுள்ளிகள் வரவழைத்து ஒப்பந்தாரர்களிடம் பணி ஒப்படைக்கப்பட உள்ளது.

இத்திட்ட செயல்பாட்டிற்காக தேர்வு செய்யப்பட்ட வாளகத்தில் Phase I தேர்வு செய்யப்பட்ட இடத்தில் பணிகள் துவங்க ஏதுவாக (identified) அடையாளம் காணப்பட்ட 5.60 ஏக்கர் T.S.No: 5/1 & 5/2—ல் கட்டுப்பட்ட நிலத்தில் பிரவேசித்திட நகராட்சி நிர்வாக இயக்குனரகம் மூலம் அரசின் ஒப்புதல் பெற்று TIDEL நிர்வாகத்திற்கு சர்வே பணிகள் மற்றும் ஆயத்த பணிகள் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 254**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**இடம்: மதுரை**
**நாள்: 26.06.2023**

**(ஒம்.) திருமதி. வ.இந்திராணி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**